உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. க. } சௌமிய ௵ புரட்டாசி ௴ { பகுதி ௬.

விடாமுயற்சி.

—(o)—

(தொடர்ச்சி)

இனி, "முயற்சி திருவினையாக்கும்" என்பதன் கருத்தைச் சிறிது நன்காராய்வாம். "திரு" என்றால் "இலக்குமி" ஆதலின், முயற்சியுடையார்க்கு லக்ஷ்மி கடாக்ஷமுண்டு என்பது விளங்கும். தனம், தானியம், தைரியம், வீரம், ஜயம் முதலியவற்றிற்கு அதிதேவதை அவளேயாதலின், முயற்சியுடையார்க்கே அஷ்ட ஐசுவரியமும் சித்திக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். ஆயினும் நீர்ப்பூக்கள் நீர்க்குத் தக்கபடி உயர்வதுபோல மனிதர்கள் தத்தம் முயற்சிக்குத் தக்கபடி பயன் அடைகிறார்கள்.

ஒருவற்கு இடம் பொருள் ஏவல், உடல்வலி, கூரியமதி நற்கேள்வி முதலியன இருந்தும், ஊக்கம் ஒன்றிலையேல், அவனது அரும்பேறுகள் அனைத்தும் அற்பமும் பயன்பெறா. இதுபற்றியன்றோ செந்நாப்புலவர்,

"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று." என்றனர்.

தெய்வச் செயலாலும் மானுடக்குற்றத்தாலும் நேரிடும் இடையூறுகளால் காரியத்தாழ்ச்சி உண்டாகும் போது அநேகர் புந்தி மயங்கிச் சிந்தை மாழ்குகின்றனர். மனமுறிந்து இடர்ப்படும் இன்னோர்

க்கு அமிர்த சஞ்சீவியாகவும் அற்புதவரம்பாகவும் நின்று உதவுவது விடாமுயற்சியே.

"உலையா முயற்சிகளைகளு" உறுபயனுற்ற உத்தம ஸ்திரீ புருஷர்களின் வரலாற்றினை நம்பரத கண்டத்துப் பழஞ்சரிதங்களிற் பரக்கக்காணலாம். அவ்வனைவரது வரலாற்றையும் ஈங்கெடுத்தறைவது அசாத்தியமாதலின், அவர்களிற் சிலரைமட்டும் உதாரணமாக ஈங்கு எடுத்தோதுவாம். அவர்களாவர்:—

(1) அற்ப ஆயுள் வாய்ந்த சத்தியவானை மணந்து அவனது ஆருயிர் கவர வந்த கூற்றுவனையும் வசப்படுத்தித் தன் கணவனைத் தீர்க்காயுளும் மாமன் மாமியரை நேத்திரப்பேறும் அரசும் பெறச் செய்த சாவித்திரியும்,

(2) கலியின் சூழ்ச்சியால், மதியிழந்து மாயக்கவருடி அரசிழந்து தனது கணவன் தன்னைக் கானகத்தே காரிருளிற் கைவிட்டகன்ற காலத்துக் குன்று ஊக்கத்துடன் அவனைத் தேடுவித்து ஓர் தந்திரத்தினால் அவனைத் தன் தந்தை பால் வருவித்து அவற்குற்ற இடுக்கண் நீக்கி நிகரற்றவாழ்வுபெற்ற தமயந்தியும்,

(3) க்ஷத்திரியராய்ப் பிறந்தும் முயற்சிவலியால் தேவரும் யாவரும் வியப்பப் பிரம ரிஷியான விசுவாமித்திரரும்,

(4) மாற்றுந்தாயின் கொடுஞ் சொல் பொறுது கொடிய கானகம் புக்கு ஆங்கு நேர்ந்த எவ்வித சோதனைக்கும் இடம் தராமல் அருந்தவம் இயற்றி ஈசுவரானுக்கிரகம் பெற்றுப் பெற்றோரையும் உற்றோரையும் வாழ்வுறச் செய்து "எத்தாரகைக்கும் முனிவர்க்கும் மேற்சென்றிருக்" கும்படியான பெரும்பேறு பெற்ற துருவனுமே.

இக்காலத்தும் நமது சென்னை ராஜதானியிலேயே தோன்றிய ராஜா ஸ்ரீ த. மாதவராவ், ஸ்ரீ தி. முத்துசாமி ஐயர், ஸ்ரீ அ. சேஷையசாஸ்திரியார், ஸ்ரீ கு. சேஷாத்திரி ஐயர், ரிஷியூர் ஸ்ரீ வே. ஸ்ரீநிவாஸையர் முதலியோருடைய ஜீவிய சரித்திரமானது "ஒருவ

15

னுக்கு முன்னுக்கு வர விருப்பமுண்டாயின், அவன் விடாமுயற்சியோடிருக்கக் கடவன்" என்று பறையறையுமன்றோ?

இனி, மேற்றிசையோரிலும் ஊக்கமும் உலையா முயற்சியுமே மேற்கொண்டு காரிய சித்திபெற்ற பலரிற் சிலரை உதாரணங் கூறி இவ்வியாசத்தை நிறுத்துவாம்.

(1) நிர்வாகமற்றவனாயிருந்தும், தான் உத்தேசித்த கப்பல் யாத்திரைக்குத் தனக்கு உதவி செய்யப் பல தேசத்து அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் பத்து வருடங்களுக்கு அதிகமாக விண்ணப்பம் செய்து வெகு பிரயாசைப்பட்டுக் கடைசியாக பழங்கப்பல்கள் மூன்றே பெற்றுப் புறப்பட்டுச் செல்கையில், பலவிதமான இடையூறுகளுக்குள்ளாகிய காலத்தும் அதிமூர்க்கமாய்த் தன்னையே கொன்று போடக் கப்பலோட்டிகள் துணிந்த காலத்தும் மனமுறிந்து போகாமல் அவர்களுக்கு இதங்கூறி மேலும் மேலும் சென்று * அமெரிகாவைக்கண்டு பிடித்த கோலம்பஸையும்,

(2) திக்கித் திக்கிப் பிதற்றும் வாயையும் தாழ்ந்த குரலையும் பல விகார அபிநயங்களையும் இயற்கையிலேயே வாயப்பெற்றும், சிறிதும் மனஞ்சலியாது தினந்தோறும் உற்சாகத்தோடு கொஞ்சம் கொஞ்சமாய் முயன்று அவ்வவலட்சணங்களை அறவே அகற்றிச் "சிறந்த நாவலர்" எனச் சிறப்புப் பெயர் பெற்றோங்கிய கிரேக்க சிரேட்டராகிய டெமாஸ்தனீஸனும்,

(3) அறுமுறை யுத்தத்தில் தோல்வியடைந்து மனந்தளர்ந்து பயிர்க்கு அஞ்சி ஓடி ஓர் குடிசையிற்றங்கியிருந்த காலத்தில் அக்குடிசை முகட்டில் வலை நெய்ய எண்ணிய சிலம்பி ஒன்று தனது நூலின் ஓர் முனையை ஓர் உத்திரத்தில் கட்டி மறுமுனையை மறு உத்திரத்தில் தொடுக்க அந்நூலில் ஊஞ்சலாடி ஆறுமுறை முயன்றும் காரிய சித்திபெறாமல், ஏழாவது முறை அதிவேகத்துடன் ஊஞ்ச

---

* இதுவே இப்பொழுது மேலைத்திசையில் உள்ள பலதேசங்களினும் நாகரீகத்திலும் ஐசுவரியத்திலும், வல்லமையிலும் சிறந்து விளங்குவது.

லாடி அந்நூலை உத்திரத்திற் சேர்த்ததைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்து, அறுமுறை அபஜயப்பட்ட தனது நிலைமையும் அவ்வணமே ஆகுக என்று தீர்மானித்து, ஏழாமுறை சண்டைக்குச் சென்று ஜயம் பெற்று ஸ்காட்லண்டின் சுவாதீனத்தை ஸ்தாபித்த ராபர்ட்புரூஸ் மன்னனையும் ஆங்கிலம் கற்று உயர்தரக்கல்வி பெற்றோர் அறியாமற் போகார்கள்.

கடைசியாக நாம் சொல்லவேண்டுவதிங்கொன்றுண்டு. காரியசித்தி பெறவிரும்புவோர், "ஒரு நாள் சுறு சுறுப்பாய் இருந்து ஒரு நாள் சோம்பலாய் இருப்பதனாலேயும், கொஞ்சகாலம் ஒன்றைத் தொடங்கி பிறகு அதைவிட்டுச் சிலகாலம் வேறொன்றிற் பிரவேசிப்பதனாலேயும் பிரயோஜனம் உண்டாகவேமாட்டா" தென்பதை மனத்திலிருத்துவார்களாக. ஒருவன் எவ்வளவு மந்தனாக இருந்த போதிலும் "எறும்பூறக் கல்லுந்தேயும்" என்ற பழமொழிப்படி மனஞ் சலியாது உற்சாகத்தோடு சிறிது சிறிதாக உழைத்து வருவானேயானால் எப்படியும் முடிவில் அவன் காரியசித்தி பெறுவான். தன்னைப்பலவானென்றும் கெட்டிக்காரனென்றும் நினைத்து ஒரோர் வேளை மாத்திரம் முயற்சிப்பவன் ஒருபோதும் விருத்தி அடையமாட்டான். இதற்கு "ஆமையும் முயலையும்" பற்றிய கதையே போதிய திருஷ்டாந்தமாகும்.

பத்திராதிபர்.

அன்னையும் பிதாவும்.

(1)

(160-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்தக் கிரமத்தை யுணர்த்துவானே ஒருமையில் தெய்வ மென்ற எழுது ஔவைப் பிராட்டியார் அன்னையும், பிதாவுமென, எண் உம்மைகளால் பிரித்தனர். இங்ஙனம் அருட்டன்மையில் ஒருமையினரேயாயிருந்தாலும், பொருட்டன்மையில் இருமையின ரேயா யிருக்கிறபடியால், அவர்கள் பெற்றோர் என்று பன்மையிற் பேசப்பட்டனர்.

இனி தெய்வம் என்றது நமக்குவேண்டிய அறிவின் (விளக்கக்) காரணமாகும்.

> "மாயா தனுவிளக் காய்மற்றுங் காணுதேல்
> ஆயாதா மொன்றை யதுவறிவாய்." என்றபடி,

அறிவின் விளக்கம் சரீரம் பற்றியே நிகழ்வதாகும். ஆகவே அறிவின் விளக்கத்திற் கின்றியமையாத சரீரத்தைத் தந்தருளின வரும் கடவுளும் தெய்வம் எனப்பட்டனர். அவர்

> "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
> தவா அப் பிறப்பீனும் வித்து" என்றபடி,

நமது இச்சையின்வழியே அருமையான இந்த மானுட சரீரத்தை நமக்குக் கொடுத்தனர். நிலவுலகத்துள்ள நாளளவும் "வேண்டு வார் வேண்டிற் றெல்லாம் வேண்டியாங்கருள்வோ" ராகிய அவரே நம்மைப்பாதுகாத்து வருகிறார். அப்பால் நாம் மரித்த பின்னரும் நம்முடைய நல்வினை தீவினைகட்குத்தக்க சுக துக்கங்களைக் கூட்டிப் புசிப்பிப்பவரும் அவரே. ஆனபடியால் நேற்றுமின்றும் நாளையும் (அதாவது திரிகாலத்தும்) தெய்வம் அறிவாயிருந்து நமக்கு அறி வெழுப்பி சகல போகங்களும் நம்மை அடையச் செய்கிறது. அவர் ஊரும், பெயரும், உருவுங், குணமும், குறியுமில்லாத ஒரு பெருங்கருணைத் தடங்கடலாயிருக்கிறார். அவர் பெற்றோர்களின் வழியாகவே நம்மை மனுடராக்கி விட்டனர். வேறு எந்த வழியா லும் நமதுஉற்பத்தி கேட்கப்படவில்லை. ஆகவே, தெய்வம் எந்தவழி

யாக நம்மைப் பிறப்பித்திருக்கிறதோ, அந்த நமது பெற்றோர்களின் வழியாகவே "மகனறிவு தந்தையறிவு", "தாயைப்போற்பிள்ளை" என்று கேட்கப்படுகிறபடி அறிவையும் உதிப்பிக்கின்றது. ஆனபடியால் நமது சரீரோற்பத்திக்கும் அறிவினபிவிர்த்திக்கும் பெற்றோர்களும் காரணர்களா யிருக்கிறார்கள். பெற்றோ ரில்வழி எவருமில்லையே யாவர். ஆகவே பெற்றோர்களாலேயே உலகம் உள்ளதாகக் காணப்படுகிறது. அதுபற்றியே இங்கே பெற்றோர்களைத் தெய்வமென்று உபசரிக்கப்பட்டது. இந்தக் கண்கண்ட தெய்வத்தாலேயே காணவேண்டிய தெய்வத்தையும் அறிவுறுத்தப் பெறுவோமாதலின் இதுமுன் வைக்கப்பட்டதாம்.

இவ்வாக்கியத்தில், அன்னையை முன்னரும், பிதாவைப் பின்னரும் வைத்தமுறை என்னையெனின், பிள்ளையானவன் முதலாவது தாயை யறிகிறான். தாயைத்தெரிந்துகொண்ட பிள்ளைக்குத் தாயே தந்தையை யறிவுறுத்துகின்றாள். அப்பால் தந்தையால் குருவையும், குருவாற் றெய்வத்தையும் பிள்ளை அறிகிறான். அந்த முறைபற்றியே ஈண்டுத் தாயை முன்வைத்தன ரென்பர் பெரியோர். அல்லாமலும்,

"அன்னையா னவள்தா தைக்கும் அதிகமன் னையும்பி தாவும்
முன்னையோர் தெய்வ மென்ற மொழிக்கெவர் முதன்மை பூண்டார்
பின்னொராச் சிரமத் தேகிப் பிதாவையும் வணக்கங் கொள்ளும்
சன்னியா சிகளு மந்தத் தாயரைத் தொழுவர் அன்றோ" என்றபடி,

அன்னையும் பிதாவுமென்ற இந்நூலாதரவு பற்றியும், பிதாவும் வணங்கத்தக்க சந்நியாசிகள் தாயை வணங்குவது பற்றியும், தாதையைக்காட்டிலும் தாயார் மேம்பாடுடையவ ரென்றாகின்றது. இந்நூலாசிரியர், "தந்தை தாய்ப்பேண்" என்றும் உரைத்தருளியிருக்கிறார். ஈசுவரானுக்கிரகத்தால், பிதா இன்றியுண்டாகிய அவதாரத் திருமேனிகள் (ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் போல்வார்.) தாயை மாத்திரம் வைத்துண்டாயிருத்தலின் சந்நியாசிகள் தாயைமட்டும் வணங்கவேண்டிய கிரமங்க ளேற்பட்டிருக்கலாம்.

(இன்னும் வரும்)

த. ஆறுமுகநயினார் பிள்ளை.

யாத்திரைக் குறிப்பு.

ஜனகப்பூர்.

இது ஜனகமகாராஜாவின் ஊர். சீதை பிறந்தவிடம் இதுவே. அயோத்தியாவிலிருந்து இதற்கு சார்ஜ் ரூ 3—12—0 பெல்முகான் ஸ்டேஷனுக்கு டிக்கட் கொடுப்பார்கள். சரயுநதி பாலத்திற் செல்ல தலைக்கு பைசா 6 தரவேண்டும். துவிசக்கரவண்டி, வெற்றுவண்டி, கோச்சு, சாமான்வண்டி, ஆள் தள்ளுகிற வண்டி இவைகள் பாலத்திற் செல்ல 2 அணு முதல் அரை ரூபா வரை கொடுக்கவேண்டும். ஒரு வண்டி போய்த்தான் மற்றொருவண்டி வரவேண்டும். இருப்புப் பாதை தென் இந்தியா ரயில்வேயிலும் சில மணி ஒன்றுக்கு 8 முதல் 12 மைல் வரைதான் ஓடும். சிவான் ஸ்டேஷனில் இறங்கி வேறுவண்டி ஏறவேண்டும். ஜனகப்பூர் ரஸ்தா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 12 மைல் வரைதான் இங்கிலிஷ் இலாகாவைச் சேர்ந்தது; பிறகு ரஸ்தா நேபாள ராஜ்பத்தைச் சேர்ந்ததாகும். ரஸ்தா போக்குவரவிற்கு ஏற்ற சௌகரியத்தோடு கூடியதன்று. வண்டியில் சாமான்களை ஏற்றிப்போகலாமேயன்றி ஜனங்கள் உட்கார்ந்து செல்லமுடியாது. ரஸ்தா அவ்வளவு ஆபாசம். சீதை பிறந்த இடம், ஜனகமகாராஜாவின் அரண்மனை, ஸ்ரீராமர் கல்யாணம் செய்துகொண்ட இடம், ஸ்ரீராமர் வில் முறித்த இடம் இவைகளைக் குறிப்பாகப் பார்க்கலாம். இங்குத் தங்குவதற்குக் கோயிலில் இடம் உண்டு. தெருக்கள் மிகவும் ஆபாசம். கறி காய்கள் அகப்படா. கும்பங்களிற் போய் பிரயாசைப்பட்டு வாங்கினால்தான் அவை கிடைக்கும். தபால் தந்தி கிடையாது. இதற்கு 10 மைலுக்கப்பால் ஸ்ரீராமர் தனுசு எறிந்த இடம். தனுசு 132 சாண் நீளமுள்ள செம்பு மூன் கல்லுப் பாறையின்மேல் வளைவாக இருக்கிறது. இப்பாறையைச்சுற்றி சோலை. அதில் அதி அழகாக மாமரமும் அரச மரமும் வளர்ந்திருக்கின்றன. இவற்றைத்தான் ஜனங்கள் பூஜை செய்வார்கள். அங்குப்படித்துறையுள்ள ஓர் பெரிய குளமும், பெரிய கிணறும் இருக்கின்றன. ஜலத்தைத்தவிர நெருப்புமுதலியன அகப்படா. மேற்சொன்ன 10 மைலில் 2 மைல் சூரியகாந்தி படாத அசாத்தியமான காடு. இமயமலையை அவ்விடமிருந்து செவ்வையாகப் பார்க்க

லாம். அவ்விடத்தில் மெத்தையுள்ள கட்டிடம் இரண்டுள. இங்கு வழங்கும் நாணயம் ஜனகப்பூரில் செல்லாது. கட்டக்காசாக அதனை மாற்றிக்கொள்ளவேண்டும். பகலில் சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு பக்கத்திலுள்ள ஊருக்கு வந்துவிடவேண்டியது தான். அவ்விடத்தில் 2, 3 சாதுக்கள் மட்டும் இருப்பார்கள். தயிர் நெய் முதலியன அகப்படா.

கல்கத்தாவிலிருந்து ஜனகப்பூர்க்கு ரயில் சார்ஜ் ரூ 4—12—0 ஜனகப்பூரில் சுவாமி தரிசனம் செய்யுங்காலத்தில் குருக்கள் தீபாராதனை முதலியன செய்வதானது நம் ஊர் தாசிகள் அபிநயம் பிடிப்பது போல் மிக வேடிக்கையாயிருக்கும். அன்றியும் குருக்கள் தலையில் தலைப்பாகை, நிலை அங்கி, கால்சராய், மேற்சோடுடன் தீபாராதனையாதிய செய்து சுவாமிக்கு முன்னால் இருக்கிற மேடையின் மேல் உட்கார்ந்து விடுவார்கள். சுவாமி தரிசனம் செய்பவரும் ஜனங்கள் அவர்களுடைய காலைத்தொட்டுக் கும்பிட்டுத் தீர்த்தம் வாங்கிக்கொண்டு போவார்கள். தீபாராதனைக்கு 10 நிமிஷத்திற்கு முன் 4 கூடையில் ஜால்ரு, சேமக்கலம் முதலியவை கொண்டுவந்து வைப்பார்கள். தரிசனத்திற்குவரும் ஜனங்கள் தான் அவற்றை முழக்க வேண்டியது:

ஹரிஹர க்ஷேத்திரம்.

பெல்முகானிலிருந்து ஹரிஹர க்ஷேத்திரத்திற்குச் சார்ஜ் ரூ 1—3—0 சோமஸ்திப்பூர் என்னும் ஸ்டேஷனிலும், முசபர்பூரிலும் இறங்கி ஏறவேண்டும். ஊருக்கும் ஸ்டேஷனுக்கும் 1 மைல். இங்கு சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஏக ஆசனம். சந்நிதிக்கெதிரில் அனுமார் கோவில். பூஜை செய்கிறவர்கள் சந்நியாசிகள். இவர்களுக்கு "மகந்து" என்று பெயர். இவ்விடம் சரயு, சோனபத்திரா, புநம்புநா, கங்கை, மகிதாரணி, கண்டகி, சாளிக்கிராம் ஆகசப்தநதிகளின் சங்கமம். கோவிலுக்கு நதி மிக சமீபம் ஹரிஹர க்ஷேத்திரத்திலிருந்து அயோத்திக்குச் சார்ஜ் ரூ 2—9—0.

கமலாலயன்.

ஐவன்ஹோ.

—o—

(151-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸிட்ரிக் தனது உயர்ந்தஆசனத்திலிருக்கும்போது விருந்தினர் சாப்பிட வரவே, மரியாதைக்காக எழுந்து மூன்றடி முன்னே வந்து அவர்களுக்குக் கைகொடுத்து அழைத்து "ஐயன்மீர்! நீங்கள் தயவு செய்து என் தாய்பார்ஷையாகிய ஸாக்ஸனிலேயே பேச எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும். நீங்களும் கூடுமானால் அதே பாஷையில் பதில் சொல்ல வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இல்லையென்றால் எனக்கு நீங்கள் பேசுவதை அறிந்து கொள்ளும்படியான நார்மன் பாஷை கொஞ்சம் தெரியும்" என்றான்.

இதைக்கேட்ட சன்னியாசி, உத்தரமாகச் சில மரியாதை வார்த்தைகளைச் சொன்னான். ஆனால் அகம்பாவம் கொண்ட வீரனோ "நான் எப்போதும் பிரபுக்களும் நாகரீகமடைந்தவர்களும் அரசர்களும் பேசுகிற நார்மன் பிரன்சு பாஷையையே பேசுவது வழக்கம். ஆனாலும் எனக்கு சுதேசிகளோடு பேச வேண்டியவளவு கொஞ்சம் ஸாக்ஸனும் தெரியும்" என்று அலக்ஷியமாய்ச் சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் ஸிட்ரிக்குக்கு மகா கோபமுண்டாய்விட்டது. அவனை அங்கேயே தொலைத்துவிடலாமா என்று கண்ணெருப்புப் பொறி பறக்கும்படி பார்த்தான். ஆனால் உடனே "அதிதியாகிய இவனுக்கு நாம் இடர் செய்தல்தகாது" என்று நினைத்துக் கோபத்தை அடக்கிக்கொண்டு அவர்களை உயர்ந்த மேடையில் உட்காரவைத்து வேலைக்காரரை சாப்பாடு கொண்டுவந்து பரிமாறும்படி கட்டளையிட்டு இருவரையும் சாப்பிடும்படி உபசாரம் செய்தான்.

எல்லாரும் சாப்பிட ஆரம்பிக்கும் சமயத்தில் திடீரென்று வீட்டு உக்கிராணக்காரன் ஒரு தடியைக் கையிலெடுத்துக்கொண்டு "பொறுங்கள் பொறுங்கள். ரோவேனா சீமாட்டிக்கு இடம் கொடுங்கள்" என்று உரக்க அதட்டிச் சொன்னான். உடனே கூடத்தின் ஒருபக்கத்தில் திறந்த வாசற்படி வழியாக நாலு தாதியர் பின்தொடரவந்த அழகான ரூபலாவணியமும் யௌவன சௌந்தரியமும் பின்னிவிட்ட கருங் கூந்தலுமுடைய ரதிபோன்ற 22 வயதுள்ள பெண் ஒருத்தி வருவதைப் பார்ததார்கள். அவள் வெளுத்த பச்சைப் பட்டாடை உடுத்துக்கழுத்தில் சுற்றிய ஒரு தங்கச் சங்கிலியை அணிந்து கொண்டிருந்தாள். அவள் பின்புறத்தில வேண்டியபோது முகத்தை மூடிக்கொள்ள ஒரு பட்டு உருமால் தலையி

னின் றும் முழங்கால் வரையில் தொங்கிற்று. இவ்வித சௌந்தரியம் பொருந்திய மாதா சிரோமணியைக் கண்ணுற்றவளவில் கொஞ்சமேனும் கண்கொட்டாது கில்பர்ட் தன் இரண்டுகண்ணும் விளக்குக்கூடுகள்போலச் சிவக்கும் வரை உறுக்கிப்பார்க்க ஆரம்பித்தான். இங்ஙனம் இவன் நோக்குவதை அறிந்த ரோவேனா இதைக் கொஞ்சமேனும் விரும்பாதவளாய் அவன் முகத்தில் அடித்தாற்போல தனது உருமாலால் முகத்தை மூடிக்கொண்டாள். இதைக் கண்ணுற்ற விட்ரிக் தன் விருந்தினருடன் வேறுவிதமாய்ப் பேசி இதை மறக்கும்படி செய்ய ஆரம்பித்தான்.

இந்த ரொவேனா என்பவள், விட்ரிக் வெகு பிரியமாய் வளர்க்கும் அருமையான ஒரு பெண் மணி. அவளுடைய தாய் தகப்பன் எல்லாரும் அவளுடைய சிறு பிராயத்திலேயே இறந்து விட்டபடியால், அநாதை ஆன அவள், இவனை சொந்தத்தகப்பனைப்பெற்றுப் பெண்ணைப் போலவே அன்பாக நடத்தப்பட்டு வந்தாள்.

இந்த விட்ரிக்குக்கு ஐவன்ஹோ என்ற ஒரே பிள்ளை உண்டு. அவனும் வெகு பராக்கிரமசாலி. வில்வித்தையிலும் ஆயுதப் பயிற்சியிலும் வல்லவன். 25 வயதுள்ளவன். பரந்த மார்பினன். திரண்ட தோளினன். இவ்வாறு பலாட்டியனு யிருப்பதோடு கூட வெகு புத்திசாலியென்றும் நல்லவன் என்றும் பேர்வாங்கினவன். இவனுக்கும் ரோவேனாவுக்கும் சிறு பிராயம் முதல் அன்பு வளர்ந்து வரவே தக்ககாலத்தில் ஒருவரை ஒருவர் மணம்புரிய வேண்டுமென்ற ஆசையும் உண்டாகிப் பரஸ்பரம் நிரம்பவும் நேசித்து வந்தார்கள். விட்ரிக்குக்கு இவ்வாறு ரோவேனாவை ஐவன்ஹோ விவாகஞ்செய்து கொள்வது மனத்திற்குப் பிடியாதபடியால் வேண்டியவளவு சொல்லிப் பார்த்தான். ஐவன்ஹோ அவளையே கலியாணம் செய்துகொள்வதில் உறுதியாயிருந்தபடியால் தான் சொன்னபடி கேட்காதபிள்ளை இருந்து என்னபிரயோசனம் என்றுஎண்ணி அவனை வீட்டை விட்டுத்துரத்தினதோடு தனது சொத்துக்கள் ஐவன்ஹோவுக்குப் பாத்தியம் இல்லை எனவும் பகிரங்கப்படுத்தி விட்டான். ஐவன்ஹோவோ தகப்பன் மாளிகையினின்று நீங்கி ரொவேனாவையே நினைத்தவண்ணமாய் என்ன செய்யலாமென்று யோசித்துக்கடை

சியாக பரிசுத்த பூமியைக் கைப்பற்றியிருக்கும் சாரஸர்களின் அரசனை ஸலாடின் கையினின்றும் கிறிஸ்து கல்லறையை விடுவிக்கப் புறப்பட்ட ரிச்சர்ட் அரசனோடு கூடச் சென்றான். அங்கேபோன பிறகு ரொவேனாவுக்கு அவனது க்ஷேமங்கள் ஒன்றுந் தெரியாததால் அவள் தனது காதலனுக்கு என்ன நேர்ந்ததோ என்று எப்போதும் ஏங்கி நின்றாள்.

இவ்வாறு விருந்தினரும் ரொவேனாவும் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பிக்கையில் மறுபடி வாசற்காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து "வயதுமுதிர்ந்தகிழவன் ஒருவன் ஒரு ராத்திரிக்கு சாப்பாடும் தங்குமிடமும் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறான்" என்றான் அதற்கு ஸிட்ரிக்,

"யாராய் இருந்தால்தான் என்ன? எந்த விருந்தினருக்கும் என் வீட்டுக்கதவு அடைபடக்கூடாது. இப்படிப்பட்ட இரவில் துஷ்ட மிருகங்கள்கூட ஆட்டுமந்தையில் மிகவும் சாதுவாய் அடைக்கலம் புகும். பெரிய பகைவர்கூட இவ்விரவில் ஒருவருக்கொருவர் சச்சரவை நிறுத்தி ஒரே இடத்தில் தங்க நேரும். வரட்டும். வந்தாலென்ன? ஆஸ்வால்ட்! போய்ப்பார்த்து அழைத்துவா" என்றான்.

சற்றுநேரத்திற்கெல்லாம் ஆஸ்வால்ட் திரும்பிவந்து "ஐயா அவன் யார்க்கில் இருக்கும் ஐஸாக் என்னும் *யூதன். அவனைக் கூடத்திற்கழைத்துவந்து பந்தியி லுட்கார வைக்கலாமா?" வென்று கேட்டான். உடனே சன்னியாசி திடுக்கிட்டவன்போல "தெய்வமே! உம்மிடத்தில் நம்பிக்கையில்லாத யூதனையா கூட உட்கார்த்தி வைத்துச் சாப்பிடுகிறது?" என்றான்.

---

*யூதர்கள் கிறிஸ்து பிறந்த பாலஸ்தீனாவில் இருந்தார்கள். கிறிஸ்து மார்க்கத்தை நம்பாதவர்கள். அவர்களுக்கு ஐரோப்பாவிலும் ஏனைய இடங்களிலும் கொடுக்கல்வாங்கல்வியாபாரம். 100க்கு 25க்குக்குறையாமல் வட்டி வாங்குவதால் "கடுவட்டி வாங்குபவர்கள்" என்று எல்லாராலும்வெறுக்கப்பட்டனர். அவர்கள் வயிற்றுக்குக் கூட சாப்பிடாமல் பணத்தைச் சேர்த்து வந்தார்கள். பணம் வருமானால் எவ்வித குரூர காரியமும் செய்யத் துணிவார்கள். உயிர் போனாலும் பணத்தை விடமாட்டார்கள். (இந்தியாவில் சில மார்வாரி நாட்டுக்கோட்டைசெட்டிகளைப்போன்றவர்கள் இவர்கள்.)

கில்பர்ட் வீரன் "கேவலம் யூதனாயையா பரிசுத்த கிறிஸ்து கல்லறையைக் காக்கும் என் பக்கத்தில் வைத்துச் சாப்பிடுகிறது?" என்றான்.

உடனே விட்ரிக் "கனம் பொருந்திய அதிதிகளே! உங்களுக்கு அந்த மனிதன் பேரில் விருப்பம் இல்லாவிட்டால் அதற்காக நான் அவனை என் வீட்டை விட்டுப்போ என்று சொல்ல முடியாது. ஆனால் நீங்கள் எல்லாரும் அவனோடு உட்கார்ந்து சாப்பிட நான் கட்டாயப்படுத்த மாட்டேன்" என்று சொல்லி "ஆஸ்வால்ட்! நீ அவனைத் தனியாக உட்காரவைத்து சாப்பாடுபோடு" என்றான்.

இவ்வாறு சொன்னதும் அந்த யூதனைக் கூடத்தில் அழைத்து வந்தார்கள். தள்ளாத கிழவன்-மெலிந்த சரீரமும் நுட்பமான கருத்த விழிகளும் நீண்டு வளைந்து வந்த மூக்கும் நீளமாய் நரைத்துப் போன மயிரும் மார்புக்குமேல் அடர்ந்து தொங்கின தாடியுமுடைய அவன்-பயத்தோடும் சந்தேகத்தோடும் மெதுவாய்த் தள்ளாடி நடந்துவந்தான். அவனது குல்லா சதுரமாயும் உயரமாயும் புதுமாதிரியாய் கிறிஸ்துவர்களுக்கும் யூதர்களுக்கும் வித்தியாசம் தெரியும் பொருட்டு அக்காலத்து யூதர்கள் தரித்துக் கொள்ளுகிற வழக்கம் போலவே யிருந்தது. அவன் உள்ளே வந்ததும் வெகு மரியாதையாய் தன் குல்லாவைக்கையில் எடுத்துக்கொண்டு அடக்கத்துடனும் பணிவுடனும் வந்தான். விட்ரிக் அவனுக்கு பதில் மரியாதைசெய்ய நினைத்து அலக்ஷியமாய் தலையை அசைத்து மேஜையின் கீழே ஒரு தாழ்ந்த ஆசனத்தில் வந்து உட்காரும்படி ஜாடை செய்தான்.

கேவலம் கீழான வேலைக்காரர்கூட அங்கே அவனுக்கு இடம் கொடுக்க நகர மாட்டேனென்றார்கள். உட்காருவதற்கு இடம் இல்லையென்று, எல்லாராலும் வெறுக்கப்பட்ட பிரஷ்டனை இந்த யூதன் தவித்தான். அப்போது இவர்களோடு கூடவந்த வழிப்போக்கனை பரதேசி துணியை உலர்த்திக்கொண்டு எல்லார்க்கும் முன்னமேயே சாப்பிட்டுவிட்டு ஒரு பக்கமாய் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

[இன்னும் வரும்]

S. பஞ்சாபகேச சர்மா B. A.,
Science Asst. Native High School, Kumbakonam.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யாது திவ்ய சரித்திரம்.

முன்னுரை.

சற்றேறக்குறைய 450 வருஷங்களுக்கு முன் வங்காளம் மகமதியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. வங்காளத்தில் சிற்றரசர்களிலொருவன் ஹிந்துவாயிருப்பினும் தனதரசுரிமையைக் காக்கும்பொருட்டு மகமதியனாகுவது ஸகஜமாயிருந்தது. ஸுபுத்திராய் என்ற ஹிந்து ராஜாவை அவன் சேனாபதியான ஹுஸேன்ஷான் வசப்படுத்தி 1498ம் வருஷத்தில் ஆண்டுகொண்டுவந்தான். ராஜமஹாலுக்குச்சமீபமாய் இருக்கும் கோர் (Gour) என்பது வங்காளத்துப் பிரதான நகரம். மகமதிய அரசர்களது பிரதிநிதிகள் நியாயம் செலுத்தி, ஹிந்து அரசர்களிடமிருந்து வரிவாங்கி ஒரு பங்கை ராஜநிதிக்கனுப்பி மற்றொரு பங்கைத் தாங்களே வைத்து வந்தார்கள். ஆயினும் சிற்றரசர்களிற் பல்லோர் இந்துக்களே.

கல்கத்தாவுக்கு 70 மயிலுக்கு வடக்கே பகீரதிநதிக்கரையிலுள்ள நவத்விபத்தில் ஒரு மகமதிய கவர்னர் அரசுபுரிந்து வந்தான். அந்நகரில் காலைப்போதில் லக்ஷக்கணக்கான இந்துக்கள் ஒவ்வொரு ஸ்நான கட்டத்திலும் காலை மாலையில் நீராடி நித்தியகருமமாகிய இயம நியம யோகங்கள் செய்து ஆதவனை வணங்குவார்கள். அந்நகர் வர்த்தகத்துக்குப் பேர்போனதன்று; கல்விமான்கள் நிறைந்து பாஷைகள் வேதமுதலிய மதநூல்கள் கற்கும் மாணாக்கர்குழாம் நிறைந்த பாடசாலைகளுள்ளது. அந்நகரிலுள்ளோர்க்கு கல்வியே பூஷணமாயிருந்தது. செல்வம், ராஜாங்கம், யுத்தம், வேடிக்கை முதலியன அவர்கள் கருத்தை மாற்றவில்லை. சண்டை முதலியன மனிதனினும் கீழ்ப்பட்ட உயிர்க்குரித்தென்றெண்ணினார்கள். ராஜாங்க வேலை எஜமானனின் நாயின்வேலையெனமதித்தார்கள்.

“உடல்வயத் தாகுஞ் சாதி உயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற வுயிரி னூடு செல்லுறுங் கல்வி தம்மால்
அடர்தரும் பெருமை யெய்தா ராதலா லகக்கண் ணாகித்
தொடர்புறுங் கல்வி கல்லாத் தொழிலினை விடவே வேண்டும்”

என்பதே அவர்கள் நோக்கம். “இளமையிற்கல்” என்ற வாசகப்படி 4வயதிலேயேசிறுவர்களைப் படிக்கவைப்பதுவழக்கம். பெண்டிர்க்குப்

புத்திரனுண்டானால் கல்விக்கடலிற் கரைகாணவேண்டும் என்று அல்லும் பகலும் அமலனை அவர்கள் வேண்டுவார்கள்; புத்திரி யெனின் கலைமகனுக்கே கலியாணமாகவேண்டுமென்று வாழ்த்துவார்கள்.

இத்தகைய கல்விக்கு உறைவிடமாகிய அந்நகர்க்கு இதர நாட்டிலிருந்து பல்லோர் வந்து கல்வி பயில்வர். கல்வி புகட்டக் கூலியில்லை. தெருக்கள்தோறும் கல்விச்சாலைகளுண்டு. தத்துவங்களி னெல்லாப் பாகங்களுமிருந்தும், மிதிலையில் கௌதமரால் ஸ்தாபிக்கப்பட்ட நியாய தத்துவம் கற்கநவத்வீபத்தில்ஆசிரியரில்லாததால் மிதிலைக்கே போய் அதைக்கற்கவேண்டியிருந்தது.

இக்குறையைநீக்க "வாசுதேவ ஸார்வபௌமர்" மிதிலை சென்று கற்று ஒரு கல்விச்சாலையை நவத்வீபத்தில் ஸ்தாபித்தார். பவானந்தர், வங்காளத்தில் ஹிந்துசட்டத்தின் முக்கிய ஆதாரமான ஸ்மிருதி எழுதிய ரகுநானந்தர், திதீதி (Didheeti) என்ற நியாயதத்துவநூல் எழுதிய ரகுநாதர், தாந்திரிக (Tantra) தத்துவநூல் எழுதிய கிருஷ்ணாநந்தர் முதலியவர்கள் இவ்வாசுதேவ ஸார்வபௌமரின் சிஷ்யர்களே. இச்சார்வபௌமரின் வித்தியாசாலையில் சுமார் 425 வருஷங்களுக்கு முன்னர், வயதிற் சிறியவரும், யாவராலும் மதிக்கப்பட்டவரும், புத்திவிசாலமுள்ள மாணாக்கருமாய் இருந்த "நிமை" என்ற கௌரங்கரின் சரித்திரம் இதனடியில் வரையத்துணிந்தோம்.

முதலாவது அத்தியாயம்.

ஸ்ரீ சைதன்யரது திருஅவதாரம்.

ஸார்வபௌமருடன் ஜகந்நாத மிச்சரர் என்ற ஒருவர் கல்விபயின்றார். அவர் தகப்பனாரான உபேந்திரநாத மிச்சரர் ஸில்ஹெட் என்ற ஊரினின்று நவத்வீபத்துக்கு வந்தவர். அவரது 7 குமாரர்களில் 3-வது குமாரனான ஜகந்நாதர் கல்வியில் கீர்த்தியுடன் தேறி, வைதிக கர்மானுஷ்டானங்களிற் சிறிதுந் தவறாதிருந்துவரும் நாளில், அந்நகரில் பேர்பெற்ற நீலாம்பரசக்கரவர்த்தி யென்ற கல்விமான் தனது சசிதேவி என்ற அருந்தவப்புதல்வியை ஜகந்நாதமிச்சரருக்கு மணம் புரிவித்தார். இத்தம்பதிகள் மாசற இல்லறம் நடாத்தும் நாளில் எட்டுப் பெண் குழந்தைகள் பிறந்தன. அவை யெட்டும் பிறந்-

தவுடன் இறந்துபோகத் தங்கள்விதியைநினைத்து விமலனை மகவிலாக் குறையை நீக்குமாறுவேண்ட **விசுவரூபர்** என்ற நாமமடைந்த ஒரு புத்திரனை அடைந்தார்கள். இம்மகன் பிறந்த கொஞ்ச வருஷங் கட்கெல்லாம் "நிமை" யென்றியற்பெயரடைந்த அவதார புருஷர் பிறந்தார்.

பகீரதி என்னும் நதியால் இருமருங்கும் சூழப்பட்டு நிலவளம் நிறைந்து கல்விக்கு உறைவிடமான அந்நவத்வீபத்தில் சாலிவாகன சகாப்தம்1407ல், மாதங்களிற்சிறந்த பங்குனிமாதத்தில்,பௌர்ணமி யன்று குட திசைக்கடலிற் கதிரவன் மறைய வெண்ணிலா வீசும் விண்மதிவிளங்க, திடீரெனப் பூரண சந்திரகிரகணம் உண்டாயிற்று. அச்சமயம் அம் மாசற்ற மதி வானத்திராது மண்ணில் வந்ததென இஜ்ஜகந்நாத மிச்சிரருக்குத் திருமகனாய்த் தோன்றினர் ஸ்ரீகௌரங்கர். அந்நகரிலுள்ளோர் நித்தியம் போல் ஹரிநாம பஜனையை ஆரம்பித்தனர். தெருக்கள் தோறும்ஸங்கீதகீர்த்தனைகளின் ஒலியே நிறைந்தது ஜோதிடம்வல்ல பெரியோரும் கோள்கள் நின்ற நிலையை நோக்கி நாதன்வருவானென நவின்றனர்.

ஆ! இவர் தம் எண்ணம் எவ்வளவு நிச்சயம்! நாதன் வருவதற்கு நவத்விபந்தானே? அதற்குங் காரணமுண்டு. கல்விக்கு உறைவிடமாயிருந்த நகரமே கல்வியின் பயனை நாதனை அடையும் என உலகத்தார்க்குக் காட்டுதற் பொருட்டெனக்கூறலாம்.

குழந்தை பிறந்தும் மூச்சில்லாதிருத்தல் கண்டு தாயும் மற்றும் அநேகரும் வருத்தமுற, சிறுபொழுதில் சுவாசம் விட்ட சிசுவைக் கண்டு பெற்றோர் மனம் ஆனந்தக்கடலில் மூழ்கிற்று. குழந்தையின் குணம் அசாதாரணமாயிருந்தது. பிறக்கும்போதே பருத்த பெரிய தேகம், பசும்பொன்மேனி, கண்டோர்மனம் களிக்கச் செய்யும் முகம் இவற்றோடு அது விளங்கிற்று. சிறுபோது அஃது அழும். ஹரி ஹரி என்ற நாமமுரைத்தாற் சிரிக்கும். எட்டுக் குழந்தைகள் ஒரேமாதிரியாய்ப் பிறந்ததும் இறக்கக்கண்ட ஜகந்நாத மிச்சிரரும் அவர் மனைவியும் ஆனந்த ஸாகரத்தில் அமிழ்ந்தார்கள். மற்றக் குழந்தைகள்போ லில்லாமல் சிலமாதங்கட்குள்ளே அக் குழந்தை தவழ்ந்து நடக்க ஆரம்பித்து ஒருவருமில்லாவிடில் பகீரதி நதிக்கரைக்கணுகும். அன்றேல் பாடசாலைக்குப்போகும். யாரேனும்

பார்த்துவிட்டால் உடனே ஓட்டம்பிடிக்கும். அக்குழந்தை ஓடிப்போய்த் திரும்பி வருங்காலத்தில் அதனைக்காணாது வருந்திய தாய்க்கு அது அசைந்தோடிவந்து தன்னிடம் சேரும்போதுண்டான ஆனந்தமே ஆனந்தம்!.

இக்குழந்தை பகீரதிநதியின் நீரில்விழாமலிருக்கவேண்டுமே யென்பதுதான் ஜகந்நாதமிச்சரரின்பெருங்கவலை. குழந்தையோ ஜனங்கள் நிறைந்த விடங்கட்கேகும். ஓர் நாள் ஒரு நல்ல பாம்பைப்பிடித்து அன்னையிடம் கொண்டுவர அன்னவள் கணவனுக்குரைக்க அன்று முதல் குழந்தையைக் கண்ணிமையைவிடக் காப்பாற்றிவருவதே அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. ஒருநாள் குழந்தையின்மேலிருக்கும் நகைகளை அபகரிக்க எண்ணிய மேக்க மல்லீ (Mekh mallee) என்பவன் குழந்தையை எடுத்து ஒருவருக்குந் தெரியாது ஓடிப்போக பெற்றோரும் பிறநும் ஆகுலமடைந்தனர். பிறகு திடீரென்று குழந்தைஓடிவந்து தன்னைஒருவன்எடுத்தோடினதும் தன்நகைகளைக் கழற்றித் தன்னைக்கொல்ல எத்தனித்த அவனைத் தான்மயக்கி நகைகளை மறுபடியும் போட்டுத் தெருக்கோடிவரை கொண்டுவந்துவிடச் செய்ததும், அன்னோனைப்பொருளாசையையொழிக்கச்செய்து துறவறம் பூணச்செய்ததும் தந்தைக்குரைக்க, அவர் இதென்ன ! வேடிக்கையென்று ஆச்சரியமுற்றனர். உருக்கிவார்த்த பத்தரைமாற்றுத்தங்கமென விளங்கும தேகத்தையும், அன்று மலர்ந்த பதுமம்போன்ற பாதங்களையும், யாவரையுமயக்கும் நயனங்களையும் பவளம்போன்ற அதரங்களையும், தேன்போன்ற சொற்களையுமுடைய அக்குழந்தைக்குத் துன்பம் செய்ய எந்தத்தீயனு மெண்ணுவானோ ?

அக்குணங்கள் வாய்ந்து நாலுவயது ஆகு முன்னமே பாகவத கோஷ்டியிற் சேர்ந்து கீர்த்தனைகள்பாடிக் கூத்தாடுவதைக்கண்ட பெரியோர்களும் அவனுடன் சேர்ந்து மெய்மறந்து கூத்தாடுவது வழக்கமாயிருந்தது. ஒருநாள் அதன் தாய் இது தெரிந்து குழந்தையை "எனப்பா இப்படிப் பெரியவர்களைக் கூட்டி கூத்தாடுகிறாய்? உனக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதா?" எனக்கேட்க குழந்தை "அன்னையே, இவ்வுலகத்தில் என்னைத்தவிர எல்லோரும் பயித்தியம் பிடித்தவர்களே" யெனவுரைத்தது. (இன்னும்வரும்)

கி. ஜகதீசையர் B. A.

நூல் ஆராயுமுறை.

—:o:—

(158-ம் பக்கத்தொடர்ச்சி.)

வரிசைக்கிரமமாகப் படிக்காமல் ஒன்றைவிட்டு ஒன்று படிப்பதால் நல்லது கெட்டதாகவும், கெட்டதுநல்லதாகவும் இவன் மனத்துக்குத்தோன்றி தன்மனம்போன போக்கே பொருள் விரிக்க நேர்கின்றது. அதனால் பூரண படிப்பாளர் முன்னிலையில் தான் முன்னர் தெரிந்ததெல்லாம் ஒரு சிறிதும் பயன்படாதனவாய் முடிகின்றன. அன்றி மௌனஞ் சாதிக்கவும் எண்ணல் ஆகும். இவ்விஷயத்தை ஓர் திருட்டாந்தத்தாற் பார்ப்போம். நம்மவர்களிற் சிலர் பட்டினத்தடிகள் தாயுமானவர் பிரகாசவள்ளலார் இவர்களருளிய பாடல்களிற் சிறிதுசிறிது படித்ததும் உடனே வேதாந்தஞானம் தாம் கைக்கொண்டுவிட்டதாக வெண்ணி எடுத்ததும் ஆலய நிந்தனை செய்யக் கிளம்புகின்றனர். அது என்னையெனின் "உள்ளக்கோவிலைவிட்டுக் கள்ளக் கோவிலைத்தரிசித்தலால் என்ன ஆகும்" என்பார்கள். இது என்னமதி? தாம் கெடுவதோடுவிடாமல் பிறர்களுக்கும் குருட்டுஞானம் புகட்டலால் அவர்களும் நம்பிக்கெடுகிறார்கள். முறையே வரையறுத்த படிப்பினர்க்கன்றோ உண்மை விளங்கித்தோன்றும்? மேலையார் திருநீறிடுவதும் புண்ணியப்புனலாடலும் உலக மறிந்ததல்லவா? எல்லாம் அவன் உருவம். எல்லாம் அவன்செயல். யாவையும் அவனுடையஆக்கினையே. வாய் கமழக் கமழவாய் ஞானம் பேசுவதிலென் ? சிவனும சீவனும் ஐக்கப்படுவதுதான் மேல்வழி. ஓர் இளம்பருவகுமரனும் இளம்பருவகுமரியும் காமவிருப்பத்தால் சரசசல்லாபமுற்று இருவர்களுடைய கரசரணாதி அவயவங்களும் ஒன்றோடொன்று பின்னப்பட்டு இருவரும் ஒருவர்போல இன்பநுகர்தல் சிற்றின்பமாகும். இஃதொப்ப தத்துவஙிபதி களைந்து தான் அதுவாகி தன் செயல் யாதொன்றுமின்றி தன்கண்ணுக்கு 'எல்லாம் பிரமமயம்' எனக்காணப்பட்டு ஐம்புலநுகர்ச்சி யில்லாமல் ஒரேபடித்தாய் உள்ளத்தினின்று அறிவு கிளர்ச்சிபெற அதனிடமிருந்து தோன்றும் மெய்ம்மை நிலையைக்கண்டு சதா பேரின்பத்திற் சொக்கியிருத்தலே பேரறிவாளர்களின்செய்கை. இன்னோரெல்லாம் முறையே சனனந்தொட்டே கற்று தழும்பேறி யேறி கலங்காத் தீவிரந்தோன்றி யதார்த்த நிலையைக் கைப்பிடித்தவர்கள். இக்கலியில் குடந்தை ஸ்ரீலஸ்ரீ மௌன சுவாமிகளை நாம் யாவரும் கண்ணாரக்கண்டிருக்கின்றோம். "வானும் வையமும் வந்து தாள் வணங்கும்" என்றபெரியார் வாக்கியத்துண்மை இம்மூர்த்தியால் நாம் சந்தேகமற வறிந்திருக்கின்றோம்.

"முற்றத், துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்."

என்றபடி இவ்வுண்மையாளர்கட்கு மெய்யுணர்விற் றோன்றுவதே அளவில்லாத இன்பமாகும்.

எவ்வெக்காரியங்களிலும் முறைதிறம்பலினால் பலபல தீமைகள் தோன்றுகின்றன. எத்தனையோ பேர் மொட்டையடித்து 'லங்கோடு' கட்டினவர்களெல்லாம் இப்போது வளைவுகுடுமியும் 502மல் முதலியவும் கட்டிவருகின்றார்கள். இளங்குமரிகளைக் கண்ணெடுத்துப் பாரேன் என்று தனிமடம் கட்டிக்கொண்டிருந்த சுவாமிகளெல்லாம் இரண்டு தாரம் செய்துகொண்டு காலம் ஓட்டுகின்றார்கள். ஏதாவது ஒரு விஷயத்தில் மனம் பிரவேசிக்கின் அதன் வழித்தாகவே ஐம்புலாதிகளும் அவ்வக்காரியத்தை விரும்புகின்றன. கல்வி அறிவு நிரம்பப்பெறாத ஒருவன் துறவிற்றானே நெடுநாள் இருந்துகொண்டிருப்பானாயின், உலக சனங்களைப் போல வயிறுநிரம்பத் தின்னவும் கண்ணால் விநோதக் காட்சிகளைப் பார்க்கவும் நல்ல பெண்களோடு சுகிக்கவும் இல்லாமற்போயிற்றே யென்று எண்ணுகிறான். இவ்வாறு எண்ண எண்ண இவ்விஷயங்களில் அளவில்லாத விருப்பம் என்னும் ஓர் வேர் ஊன்றிப் பருக்கின்றது. பின்னர் இங்குவந்து கலந்து கொள்கிறான். "தூர்த்தரும் தூர்ப்பாரலர்' என்றபடி கண்டாரெல்லாம் இகழ தான் தலை நாணி பழைய ஆளாய் வருகிறவரையிலும் திரிகிறான். இவ்வுலக வாழ்விலுள்ளவனொருவன் முன்னது பின்னது இன்னதென்று தெரியாமல் 'குட்டி ஞானம்' திடீர் என்று வர 'எல்லாம் பொய். சகலமும் பொய். பொம்மலாட்டம் இவ்வாழ்வு. கொண்டுவா பிச்சைச்சோறு' என்கிறான். பிற்றை இரண்டு மூன்று தினம் கழித்ததும் 'உள்ளதுங்கெட்டதே நொள்ளைக்கண்ணு' என்பது போல 'என்னவோ என் அறியாமையினால் பெண் பிள்ளைகளைவிட்டு இவ்வித கோலமாயினேன்' என்கிறான். அவனைச்சேர்ந்த சகபாடிகளும் உனக்கு என்ன மோசம் வந்துவிட்டது? 10 தினம் வேறூரில் போயிரு. பின்னர் ஒரு சாயலாக கொஞ்சம் கொஞ்சமாக வந்து ஒட்டிக்கொள்ளலாமென்கிறார்கள். 'வெளியிற் கேட்டால் வெட்கம்' என்று இரகசியம் கொஞ்சம் செய்துகொள்ளவேண்டியதாகவும் முடிகிறது. இவ்வித கேடுவருவதெல்லாம் ஒருவன் முறைமைபெறப் படித்துக்கொள்ளாததினாலல்லவா? இந்த அநியாயத்தாற்றான் பிறமதத்தார்களும் நம்மை ஏளனஞ் செய்கிறார்கள். வேதாந்தம் என்ற பதத்துக்கு 'முடிவானபதம்' என்று பொருள். யாவும் படித்து முடிந்ததும் அந்நூலுணர்ச்சி செய்வோமாயின் மனத்தடுமாற்றமின்றி நல்வழியிலே மனம் பதிந்து அமைதிபெறும். வேதாந்தநூற்களெல்லாம் இரகசியமான மார்க்கங்களையே கூறிச்செல்லும். பேரறிவுளார் அவையனைத்தும் ஒருங்கே கற்றும் உணர்ந்தும் முறைதிறம்பார். ஒருவன் முதலிற்றானே சிவன் சீவன் என்பவற்றின் பாகுபாடு கண்டு பேசப்புகுவானாகில்

முன் வழி பின்வழி இன்னதெனத் தெரியாது சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லி மங்கல நாணிழந்த கைம்பெண்களைப் போல புலம்புவதாய்விடும். வரிசை தவறுவதனால் இவ்விதகேடுகள் விளைகின்றன. நம் இந்துக்கள் ஒருவழியினும் சீருஞ் சிறப்பும் பெற்றவர்களில்லையென்று ஆங்கிலேயர்கள் தூற்றுவதெல்லாம் நாம் பல பத்திரிகை வாயிலாகத் தெரிகின்றோம். ஆங்கிலேயர்களுக்குள் கல்விபயிலும் முறைமையும், தாம் தாம் நடந்து கொள்ளவேண்டிய முறையும், சம்பாதித்தற்குரிய விநய புத்தியும் தோன்றி வளர்கின்றன. இவைகளை யெல்லாம் நாம்கேட்க ஓர் அதிசயமாக விருக்கின்றன. நம்போலியர்களின் நடக்கைகளைக் கேட்டாலோ வயிற்றெரிச்சலை யாற்ற ஓர் ஆறு வெட்டவேண்டியதாக இருக்கின்றது. நம்மவர்களிற் சிலர் சிலர் இங்கிலீஷ் பாஷையைச் சிறிது சிறிது படித்ததும் மனத்துக்கு ஏதோ ஓர் மமதை தோன்றி தகப்பனை காலடியில் உட்காரச சொல்லி வார்த்தையாடலும், தாம் நாற்காலி முதலியவற்றிலிருந்துகொண்டு தகப்பனை கடைத்தெருவுக்குப் போகச்சொல்லலும், ஏதோ பரம்பரையாக காபி குடித்தவர்களைப் போல விடிந்ததும் பல் துலக்காமலே 'காபி' காபி எனத்துடித்தலும், மாலைப்பொழுதானதும் ஏதோ 'டீ' என்று துடித்தலும் காண்கிறோம். நம்தேசம் அளவு மீறிய போஜனமும் தண்ணீர் முதலியன குடித்தலும் விடிந்து 10 மணி வரையில் உறங்குதலுமாகிய இவையனைய பிறசெயல்களானும் கெட்டு வருகின்றது. இவ்வித கெடுதல்கள் முன்னிருந்த அறிவாளர்களிடம் சிறிதும் இருந்ததுண்டா? அவர்களிடம் அமைதியே நின்று நிலவியது. எம்மக்களுக்கும் கல்வியே முதலில் ஆவசியகமானது. கல்வி இல்லையாயின் மிருக உணர்ச்சியே பெற்றவராவர். இலக்கணநூலார் எழனுருபுகளுக்குப் பொருள் விரித்துச் செல்லுமிடத்தும் பிரித்துக்கூட்டும் குழூஉப்பொருளுக்கும் 'கல்வியறிவில்லாதவன் விலங்கினுள் வைத் தெண்ணப்படுவான்' என உதாரணங்காட்டுகின்றனர். ஒருவனுக்குக் கல்வி இல்லையாயின் ஓர் எள்ளளவும் அவன் சீர் பெறான் என்க. அங்ஙனம் கல்வியிருந்தும் பூரணமாகநிரம்பி அமைதிபெற்று நில்லானேல் விலங்கிற்குங் கடையனென்க. "கற்பன கற்றுங் கற்றறிவில்லார் கடையரென்றுரைத்ததுங் காண்டி" என நம் அருமை நூல்கள் கூறுவது இங்கு யூகிக்கத்தக்கது. கற்றவருக்கும் அமைதியே முன்னர் வரல் வேண்டும். கற்றும் அமைதியோடு இருப்பவர்களே முறைப் படிப்பாளர்கள். அவர்கள்தான் அசையா மனத்தினர், கண்டது கற்பதனால்எவ்வளவு தீமைகள் விளைகின்றன அம்ம! அம்ம! ஆகவின், இன்னது கற்றபின் இன்னது கற்றல் வேண்டுமென்னும் முறைமையை மறுமுறை விரிப்பாம்.

(இன்னும் வரும்)

செ. ரெ. கொ. இராமசாமி வன்னியர்,
அரிச்சியபுரம்.

இரட்டுறமொழிதல்.

இரண்டுபொருள்படச் சொல்லுதலையே "இரட்டுறமொழிதல்" என்பர். நம்நாட்டுத் தமிழ்ப்புலவர் பலர் ஓரோர் காலங்களில் கேட்போர் வியக்கும்படி அச்சமயத்துக்கு வெளிப்படும் பருப்பொருளொன்றும் மறைந்து நின்று உய்த்துணர்ந்துழித் தோன்றி மிகவியப்பைத்தரும் நுண்பொருளொன்றும் அமையப் பேசுந்திறம் பெற்றுள்ளவராவர் இத்தகைய அற்புத வாக்கியங்களை அவ்வக் காலங்களில் பலர் கேட்டிருத்தல் கூடுமாயினும் பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு அவற்றை வரைந்து வைத்தார் யாருமிலர். சிலகாலமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையின் கண்ணே **சாதுரிய வசனங்கள்** எனப்பெயரிட்டுச் சில சொற்றொடர்கள் வெளிவந்தன. அவையாவும் நம்மவர்க்கு மகிழ்ச்சியை விளைப்பனவே. இத்தகைய சொற்களும், சொற்றொடர்களும் நமது பாருவிலும் வெளிவரல் வேண்டுமெனக் கொண்டு யாங்கேட்டறிந்த சிலவற்றை இவண்தருகிறோம்.

(க) ஓரிடத்தில் சைவ வைணவ முதலிய பல மதாசாரியர்கள் கூடியிருந்தனர். தத்தங் கொள்கையே மெய்யான வழியென்று ஒவ்வொருவருங்கூறி "நாமே மோக்ஷத்திற்குப்போவோம். நாமே மோக்ஷத்திற்கு போவோம்" என வாய்ப்பறையடித்தனர். ஆங்கு நின்றவருள் ஆசாரசீலமற்றுப் பிச்சைபுக்குண்ணும் நரைமூதாட்டியொருத்தியெழுந்து "உங்கள் கூப்பாட்டாற் பயனில்லை, நீங்கள் யாரும் மோக்ஷத்தை யெட்டிப்பார்க்கப் போகிறதில்லை; நான் போனால் யாரும் போகலாம்" என்றாள். ("நான்" என்னும் அகங்காரம் ஒழிந்தால் யாவரும் போகலாம் என்பது நுண்பொருள்.)

(உ) ஒரு பிரபு வீட்டு விசேடத்தில் பந்துக்கள் பலர் போஜனம் செய்கின்றுழி அப்பிரபுவானவர் தம் மைத்துனர் பள்ளமான இடத்திலிருப்பதைப்பரிகசிக்கக்கருதி "பள்ளப் பந்தியைப்பார்த்துப் பரிமாறுங்கள்" என்றார். அதைக்கேட்ட மைத்துனரும் புன்னகை பூத்து"நீர்குடும்பத்தலைவராக இருக்கையில் ஒன்றுங்குறைவுவராது" என்றார். (பள்ளப்பந்தி—மள்ளர் வரிசை; குடும்பத்தலைவர் - மள்ளர் தலைவர். குடும்பன் - பள்ளன்.) (தொடரும்)

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

அபிதானவிளக்கம்.

அத்திரி.

இவர் பிரமாவின் மானஸிக புத்திரர். பிரஜாபதிகளிலொருவர். அநேக வேதஸூக்தங்கள் செய்திருக்கின்றார். தக்ஷர் புதல்வியாகிய அநஸூயையை இவருடைய மனைவி. தூர்வாஸர், ஸோமன், தத்தாத்ரேயர் என்றவர்கள் இவர் புதல்வர்கள். இராமர் வனவாஸம்செய்கையில் இவரது ஆச்ரமத்துக்கு வந்ததாகவும் இவரால்பலவிதமாக உபசரிக்கப்பட்டதாகவும் இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸப்தரிஷிமண்டலத்தில் அத்திரி யென்ற ஒரு நக்ஷத்திரமுண்டு.

அநஸூயா.

இவள் தக்ஷரின் புத்ரி. அத்ரிமகாரிஷியின் மனைவி. புருஷனுடன் சித்ரகூடவனத்தில் ஓர் ஆச்சிரமத்தில் வாஸம் செய்துவந்தாள். பதி சிச்ருஷை முதலான ஸ்திரீ தர்மங்களில் மிகச் சிறந்தவள். ராமர் சீதை முதலானவர்கள் சித்ரகூடம்செல்கையில், அவர்களுக்கு அதிக உபசாரம்செய்து சீதைக்கும் வேண்டிய உபதேசஞ் செய்து ஒரு விதமான அஞ்சனமும் கொடுத்தாள். இவள் புதல்வரில் தூர்வாஸர் ஒருவர்.

அருந்ததி.

கர்த்தமரின்புத்திரியாகியஇவள் வஸிஷ்டரின் தர்மபத்நி. பதிவிரத தர்மத்தில் சிறந்தவள் ஆதலால் 'அருந்ததியைப்போல' என்று உபமானம்சொல்வதுண்டு. விவாககாலத்தில்பெண்ணுக்கு 'அருந்ததி' என்னும் நக்ஷத்திரத்தைக்காட்டி அவளைப்போல் பர்த்தாவிடத்தில் நடந்துகொள்ள வேண்டுமென்று உபதேசிப்பதுவழக்கம்.

ஸப்தரிஷி மண்டலத்தில், 'வஸிஷ்டர்' என்ற நக்ஷத்திரத்தின் அருகிலிருக்கும் பளபளப்பான ஓர்சிறு நக்ஷத்திரத்திற்கு 'அருந்ததி' என்று பெயர்.

அம்பா.

இவள் காசிராஜனுடைய ஜ்யேஷ்ட குமாரி. பீஷ்மர், காசிராஜனை ஜயித்து அம்பா அம்பிகா அம்பாலிகா என்றமூன்றுசகோதரிகளையும் விசித்திர வீரியனுக்கு விவாகம் செய்விக்கும் பொருட்டுத் தூக்கிச் செல்ல அம்பா தன்னை சாளவராஜனுக்கு நிச்சயித்திருப்பதாகத்

தெரிவித்ததின் பேரில், பீஷ்மர், அவளைமாத்திரம் திரும்பஅனுப்பி விட்டார். ஆனால் பீஷ்மரால் முதலில் அபகரிக்கப்பட்டதால் சாளவ னும் திரஸ்கரித்து விட்டான். அம்பா பின்பு வனஞ்சென்று கொடுந் தவம் புரிந்து பீஷ்மரைக்கொல்ல வரம்பெற்று, அக்கினியில்பாய்ந்து இறந்தாள். மறுஜன்மத்தில் சிகண்டியாய்ப் பிறந்து பாரத யுத்தத் தில் பீஷ்மரைக்கொன்றாள்.

அம்பிகா, அம்பாலிகா.

காசிராஜாவின்புத்திரிகள் இவர்கள். பீஷ்மர், காசிராஜனை வென்று இவர்களை யபகரித்துச் சென்று, விசித்ரவீரிய மகராஜனுக்கு விவாகம் செய்துவைத்தார். பிறகு விசித்ரவீரியன் சந்ததியின்றி இறந்து போனான். இவர்களுடைய மாமியாராகிய சத்தியவதியின் வேண்டு கோளின்படி வியாசர் இவர்களுடன் சேர்ந்த காலத்தில் அவருடைய கோரரூபத்தைக்கண்டு அம்பிகை கண்களை மூடிக்கொண்டதால் அவ ளுக்கு திருதராஷ்டார் என்ற ஒரு குருட்டுப் பிள்ளையும், அம்பா லிகை பயந்து நடுங்கினதால் பாண்டுவென்ற வெள்ளைநிறமான பிள் ளையும் பிறந்தார்கள்.

R. S. நாராயணஸ்வாமிஐயர். B. A. B. L.

கடவுள் வழிபாடு.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

திரைசெறிகடல் சூழ்ந்த இவ்வுலகின்கண்ணுள்ள சராசரப்பிர பஞ்சங்களனைத்தையும் படைத்து அவைகட்குரிய வினைப்போகங் களை யூட்டியாட்டுபவர் கடவுளேயாம். நெடுந்தூரத்திலுள்ள அக்கினி நம்கண்ணுக்குக் கண்கூடாத் தோன்றாவிடினும், அங்கிருந்து மேலெ ழும் புகையினாலாங்கு அது இருத்தல்வேண்டுமென்று நிச்சயித்தறி வதுபோலவும், காற்றை நாம் பிரத்தியக்ஷமாகப்பார்க்க முடியாவிடி னும் ஸ்பரிச வுணர்ச்சியினாலுஞ் செய்கையினாலும் அத்தகைய

பொருளொன்றிருத்தல் வேண்டுமென வூகித்தறிவதுபோலவும், கடவுள் நம்முடையகண்ணுக்குநேராகப்புலப்படாவிடினும், அவர் ஆணையால் இவணியங்கிவரும் சேதநாசேதனப் பொருள்களினாலும் விசித்திரங்களினாலும் ஓர் தனி முதலிருத்தல் வேண்டும் என உள்ளங்கை நெல்லிக்கனிபோற் சிறிதும் ஐயமின்றி அறிந்து கொள்ளலாம். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும் இவற்றின் சொரூபமாகிய ஏனைய எண்ணிறந்த பொருள்களும் இவ்வுலகத்திலே குறைவறப் பொதிந்துகிடப்பினும், பேரறிவாளராகிய கடவுளின் ஆணையில்லாமல் ஜடப்பொருள்கள் யாவும் யாவரும் வியக்குமாறு அவ்வளவு ஒழுங்காகஇயங்கமாட்டா. நாம் வாசஞ்செய்யும் இம்மண்ணுலகமும் இதற்கு நிகரான கணக்கிலாப் புவனங்களும் ஆகாயத்தில் அந்தரத்திலே இயங்குவதும், ஆழமும் விஸ்தீரணமுமுடைய கடல் இவ்வுலகத்தை நாற்புறமுஞ்சூழ்ந்திருந்தும் யாதொருவித க்ரையுமின்றி தனக்குவரையறுக்கப்பட்டுள்ள நியதிக்குள் அடங்கி யிருப்பதும், சூரியன் சந்திரன் கிரகங்கள் முதலிய யாவும் காலக்கிரமத்தில் இம்மி அளவேனும் வழுவாது இயங்கிவருவதும், மானிடர்களாகிய நாமும் நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள் முதலிய பிராணிகளும் அவ்வவ்விடத்தில் சுகமுற்று வாழ்வதற்குத் தக்க வழிவகைகள் அமைந்திருப்பதும் சர்வஜீவதயாநிதியாகிய கடவுளின் எல்லையற்ற கருணையினாலும் வல்லமையினாலுமேயாம்.

அத்தகையகடவுளுக்குஎட்டுக்குணங்களுண்டு. அவை:—தன்வயத்தனாதல் (சுவதந்திரத்துவம்), தூயவுடம்பினனாதல் (விசுத்ததேகம்), இயற்கையுணர்வினனாதல் (நிராமயான்மா), முற்றுமுணர்தல் (சருவஞ்ஞத்துவம்), இயல்பாகவேபாசங்களினீங்குதல் (அநாதிபோதம்), பேரருளுடைமை (அலுப்தசத்தி), முடிவிலாற்றலுடைமை, (அநந்தசத்தி) வரம்பிலின்பமுடைமை (திருப்தி) என்பனவாம். "எட்டுவான் குணத்தீசனெம்மான்றன்னை" எனத்திருநாவுக்கரசுநாயனாரும்" இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினனை யிறையவனை மறையவனை யெண்குணத்தினனை" எனச்சுந்தரமூர்த்தி நாயனாரும், திருவாய்மலர்ந்தருளியவாற்றானும் இறைவனுக்கு எண்குண முண்டென்பது சிவாகமநூற்றுணிபென்க. அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசிதை, வசிதை முதலிய எண்சித்திகளென்று கூறுவாருமுளர்.

கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்று ஆருகநூல் அறைகிறது.

கடவுளிடத்து நம்பிக்கையுள்ள ஒருவனுக்கும் அஃதில்லாவொருவனுக்குமுள்ள பேதமானது கண்ணுள்ளவனுக்கும் அஃதில்லாக் குருடனுக்குமுள்ள பேதமே.

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக வுடையனபோல் இவ்வுலகுக்கு ஆதிபகவன் முதலாக விருக்கின்றார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

என்னும் அருமைத்திருக்குறளை உய்த்து நோக்குக. விருப்பு வெறுப்பில்லாக் கடவுளின் திருவடியைத் தியானித்தவர்க்கு எஞ்ஞான்றும் எத்தகைய துன்பமுமணுகாது. கடவுளின் திருவடியைத் தியானிப்பவர்கள் என்றும் பரலோகத்தில் இன்பத்தையனுபவித்துக்கொண்டு வாழ்வார்கள்.

நல்வினை தீவினை என்கிற இருவகைப் பயன்களையும் நமக்கு ஊட்டுபவர் கடவுளேயாம். இன்பமடைந்து சுகமுற்றிருக்கையில் எவ்வாறு அதை நமக்கு அளித்த கடவுளிடத்து நன்றிபாராட்டுவோமோ, அதுபோலவே அவர் நமக்குத் துன்பத்தையூட்டி நம் தீவினையைக் களையும்போதும் அவருக்கு வந்தனை வழிபாடுசெய்து நன்றிபாராட்டல் வேண்டும்.

மறையுணர்ந்த வந்தணர்களுக்கு அக்கினி ரூபமாகவும், ஏனையோர்களுக்கு விக்கிரகரூபமாகவும், யோகிகளுக்கு இதயாரவிந்தத்தில் மாயா சகள சொரூபமாகவும், முற்றுந்துறந்த மெய்ஞ்ஞானிகளுக்கு எங்கும் தன்மயமாகவுந் தோன்றிக் காட்சியளித்தருளுஞ் சச்சிதாநந்த மூர்த்தியின் பாதாம்புயத்தைச் சிந்திப்போர்களுக்குத் துக்கமென்பது சிறிதேனுமில்லை.

கர்மம் மூன்றுவகைப்படும். அவை சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பனவாம். அநாதி முதற்செய்யப்பட்டுச் சேர்ந்திருக்கும் கன்மம் சஞ்சிதம் எனப்பெயர்பெறும். அதில் பரிபாகப்பட்டு இந்த ஜன்மத்தில் அனுபவிக்கப்படுவது பிராரப்தம். இச்சென்மத்தில் செய்யப்படுவது ஆகாமியம். ஆகாமியம் குறையச் சஞ்சிதம் குறையும். சஞ்சிதம் குறைய பிராரப்தம் குறையும். பிராப்தம் எடுத்த சரீரத்துடன் நீங்கும். (தொடரும்)

பு. து. இரத்தினம் பிள்ளை.